நாள் 06.08.2025

சி.சி. 709/2022

புசா 1

பெயர் : பரமகுரு

த/பெ.முத்துச்சாமி

வயது :50

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வியாபாரம் செய்து வரகிறேன் என்றால் கஞ்சம்பட்டி, பொள்ளாச்சி தாலுகாவில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி சிறுமுகை என்ற ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து சிறுமுகை 80 கி மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அடங்கியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. எனக்கும் எதிரிக்கும் தொழில் ரீதியாக பழக்கம் என்று கூறியுள்ளேன். எங்களிடம் இருந்து கைத்தறி சேலைகளை வாங்கி எதிரி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் பெயர் என்ன என்றால் பரமகுரு Hand loom Sarees ஆகும். இந்த நிதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பு புகார் மற்றும் சத்திய பிரமாணவாக்குமூலத்தில் எனது நிறுவனம் பரமகுரு Hand loom sarees என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் நான் கூறியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களான சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் வக்காலத்துநாமாவில் எனது நிறுவனம் பரமகுரு Hand loom sarees என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரியல்ல.

3. என்னுடைய நிறுவனம் சார்பான வரவு செலவு ஆவணங்கள் கொடுக்கப்படும்போது நிறுவனத்தின் முத்திரையிட்டு கையொப்பமிட்டு கொடுக்கப்படும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட அறிவிப்பு. புகார் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நிறுவனத்தின் முத்திரை வைத்து கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். பரமகுரு Hand loom sarees என்ற நிறுவனத்தின் சார்பாக எதிரிக்கு பணம் கொடுத்திருந்ததால் நிறுவனத்தின் முத்திரையிட்டு வழக்கு ஆவணங்கள் பதிவு செய்திருக்கவேண்டுமென்றால் நிறுவனத்தில் பணம் வைத்திருந்து எதிரி அவசர தேவைக்கு பணம் கேட்டார் அதனை நான் அவருக்கு கொடுத்திருந்தேன்.

4. பரமகுரு Hand loom sarees என்ற பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல, பணம் பெறும்போது எதிரியுடன் யார் வந்திருந்தார்கள் என்றால் எதிரி மட்டுமே வந்திருந்தார். 5 லட்சம் என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். எதிரிக்கு ரூபாய் 5 லட்சம் திரும்ப செலுத்துவதற்கான வசதி மற்றும் சொத்துக்கள் உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. என்னுடைய வழக்கு ஆவணங்களில் கடந்த 09.05.2021 அன்று எதிரி என்னுயை கைபேசிக்கு தொடர்புகொண்டு வழக்கு காசோலையை 11.05.2021 அன்று வங்கியில் செலுத்தவேண்டாம் என்று கூறியதாக தெரிவித்துள்ளேன். அதற்கு ஆதாரமாக call history நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக எதிரி 09.05.2021 அன்று என்னை அழைத்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. வங்கியில் செலுத்தப்பட்ட காசோலை திருப்பப்பட்ட பிறகு எதிரியிடம் மேற்படி சங்கதியை கைபேசி மூலம் தெரிவித்தேன் என்றால் சரிதான். என்னுடைய சட்ட அறிவிப்பில் காசோலை வங்கியால் திருப்பப்பட்ட பிறகு அந்த சங்கதியை நேரில் சென்று தெரிவித்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன் வந்து நேரில் மற்றும் கைபேசியில் எதிரிக்கு தகவல் கொடுத்தேன் என்று கூறினார். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பு. புகார் மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் வங்கியால் காசோலை திருப்பப்பட்டது என்ற சங்கதியை எதிரியிடம் நேரிலும் அலைபேசியிலும் தெரிவித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7. நிறுவனத்தில் கணக்கு வழக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். நிறுவனத்தின் கணக்கு வருமான வரி துறையில் தாக்கல் செய்யப்படுகிறது என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததை வருமானவரியில் காட்டவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுக்காத காரணத்தினால்தான் வருமான வரியில் அதனை நான் காட்டவில்லை என்றால் அவசர செலவுக்கு வைத்திருந்த பணத்தை எதிரிக்கு நான் கொடுத்ததால் வருமானவரியில் நான் காட்டவில்லை.

8. இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமாணவாக்குமூலத்தில் எந்த இடத்தில் வைத்து எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேலும் மேற்படி ஆவணங்களில் எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாகவோ எதிரி அதனை

பெற்றுக்கொண்டதாகவோ எங்கும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்காத காரணத்தினால்தான் எங்கு வைத்து அவருக்கு பணம் கொடுக்கப்பட்டது, பணம் கொடுத்தேன் என்ற விபரம், அதனை எதிரி பெற்றுக்கொண்டார் என்ற விபரம் குறிப்பிடடு கூறப்படவில்லை என்றால் சரியல்ல. கடையில் வைத்த பணத்தை கொடுத்தேன்.

9. மேற்படி வழக்கு ஆவணங்களான சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் சத்திய பிரமாணவாக்குமூலத்தில் எதிரிக்கு கடையில் வைத்துதான் பணம் கொடுத்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்காத காரணத்தினால்தான் எந்த கேள்விக்கும் எனக்கு ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்ததால்தான் காசோலை பெற்றுள்ளேன். எதிரி என்னிடம் தொழில் ரீதியாக சேலைகளை கடனுக்கு வாங்கும்போது ஆதாரமாக கொடுத்த கையொப்பம் மட்டும் இட்ட வழக்கு காசோலையை தன்னிச்சையாக பணம் பறிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அதனை பூர்த்தி செய்து வங்கியில் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிதான் காசோலையை பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார். நான் பொய சாட்சியமளிக்கிறேன் என்றும் எதிரி பூர்த்தி செய்து காசோலை கொடுத்தார் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. எதிரி எனக்கு பணம் கொடுப்பதற்கு எந்த கடமையும் இல்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.